# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 28.06.2018 | 1)உறுப்பினர் செயலர், எல்கை மறு சீரமைப்பு ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் எண். ந.க.எண். 3174/2017/தேபொ1 நாள் 05.10.2017ன் படி தூத்துக்குடி மாநகராட்சி 60 வார்டுகள் மறுசீரமைக்கப்பட்டு வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் 21.12.2017 அன்று தூத்துக்குடி மாநகராட்சி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டன.<br>27.12.2017 முதல் 12.01.2018 வரை ஆட்சேபனை மனுக்கள் பெறப்பட்டன. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து 30.01.2018 அன்று மனுதாரர்களின் முன்னோடி கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டு கருத்துக்கள் பெறப்பட்டன. மேலும் 08.02.2018 அன்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் மண்டல அளவிலான கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டு மனுதாரர்களின் கருத்தறியப்பட்டன.<br>08.02.2018 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான கருத்துக்கேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட மனுதாரர்களின் கோரிக்கைகளின் நியாயத்தன்மைக்கு ஏற்ப இறுதி செய்யப்பட்டு வார்டு மறுவரையறை கருத்துக்களில் வரைபடம் மற்றும் எல்லை விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.<br>தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட எந்த ஒரு பகுதியோ, குடியிருப்போ விடுபடவில்லை என்ற விபரமும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>மேற்கண்ட நிகழ்வுகளின்படி, தமிழ்நாடு வார்டு மறுவரையறை ஆணைய சுற்றறிக்கை எண்.43 நாள் 03.05.2018ன் படியும், 19.6.2018 அன்று இணை இயக்குநர் (தேர்தல்) அவர்களால் நேராய்வு செய்யப்பட்டு தெரிவிக்கப்பட்டவாறு திருத்தம் செய்யப்பட்ட இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் கீழ்க்கண்டவாறு மன்ற பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகின்றன. | 103)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| Type of Local Body | Annexure | Details of Form |
|---|---|---|
| Thoothukudi Corporation | I(d) | Data on draft Thoothukudi Corporation ward Delimitation Proposal |
| Thoothukudi Corporation | II(d) | Data on draft Thoothukudi Corporation ward Delimitation Proposal |
| Thoothukudi Corporation | IV(d) | Consolidated boundaries list |
| Thoothukudi Corporation | | Thoothukudi Corporation Ward wise map |
| **அலுவலக குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண். எப்1/4374/17 | | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் **28.06.2018**

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி